THE COVAI MAIL
ENGLISH & TAMIL WEEKLY NEWSPAPER
02 வாரஇதழ் 18 - 24 ஆகஸ்ட் 2018

# கே.பி.ஆர். கல்லூரி

கே.பி.ஆர். கல்லூரி வளாகத்தில் கொண்டாடப்பட்ட சுதந்திர தின விழாவிற்கு கே.பி.ஆர் பொறியியல் கல்லூரி முதல்வர் பொம்மன்னராஜா, கே.பி.ஆர். கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சி கல்லூரி முதல்வர் பாலுசாமி ஆகியோர் முதன்மை வகித்தனர்.

கல்லூரித் தலைவர் கே.பி.ராமசாமி தேசியக் கொடியேற்றினார். கே.பி.ஆர் பொறியியல் மற்றும் கே.பி.ஆர் கலை அறிவியல் கல்லூரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர். கல்லூரி என்.சி.சி. பிரிவின் சார்பில் அணிவகுப்பு மரியாதையை கல்லூரித் தலைவர் ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து சுதந்திர தின விழா உரையும் பின் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

